DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.112/2025**

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராமநாதன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ரெத்தினம் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 13.07.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது களபத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 21.05.2025 ம் தேதி பகல் 12.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு வேறு வேலையாக நானும் என் தந்தையும் வந்தோம். அப்போது எங்கள் முன்பாக சார்பு ஆய்வாளர் எதிரிகளை விசாரணை செய்தார். எங்கள் முன்னால் எதிரிகளிடம் இருந்து 3 கிடாயும் ஒரு டாடா ஏஸ் வாகனத்தையும் கைப்பற்றினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து அ.சாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது

கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து அ.சாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அ.சா.ஆ.2 நிழற்படத்தில் உள்ள 3 ஆட்டுக்குட்டிகளைதான் போலீசார் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள TN 55 CZ 8265 Tata Ace வாகனத்தைதான் போலீசார் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள். (**TN 55 CZ 8265 Tata Ace வாகனத்தின் நிழற்படம் மற்றும் CD அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

அ.சா.1ன் ஊரும் என் ஊரும் பக்கத்து ஊரா என்றால் ஆமாம், 3 km இருக்கும். தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் இருந்து எங்களை போன் செய்து வரச்சொன்னார்களா என்றால் இல்லை எங்களுக்கு மயானம் சம்பந்தமாக பிரச்சனை இருந்தது அதற்காக வந்திருந்தோம். மயானம் பிரச்சனைக்கு ஊரோடுதான் வந்திருந்தோமா என்றால் நானும் என் தந்தையும்தான் வந்திருந்தோம். நாங்கள் காவல் நிலையம் வரும்போது 12.00 மணி இருக்கும். நாங்கள் வரும்போது போலீசார் எதிரிகளை விசாரித்துக்கொண்டிருந்தார்கள், நாங்களும் அப்போது சென்றுவிட்டோம். போலீசார் எங்களை எழுதியிருந்த பேப்பரில் கையெழுத்து போட சொன்னார்கள். எத்தனை பேப்பரில் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் 2 பேப்பரில் தனித்தனி கையெழுத்து போட்டேன். பேப்பரில் எழுதியிருந்தார்களா தட்டச்சு செய்திருந்தார்களா என்ற விபரம் தெரியுமா என்றால் தட்டச்சுதான் செய்திருந்தார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும், படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். எதிரிகள்

பெயர் தெரியுமா என்றால் ஆஜர் 1ம் எதிரியின் பெயர் சிவா, மற்றொரு எதிரியின் பெயர் தெரியாது. எதிரிகளிடம் இருந்து பொருட்கள் எதுவும் கைப்பற்றினார்களா என்றால் 3 ஆட்டுக்கிடாயும் டாடா ஏஸ் வாகனமும் காவல் நிலையம் முன்னால் நின்றது. ஆட்டுக்குட்டியா கிடாயா என்ற விபரம் தெரியுமா என்றால் ஆட்டுக்கிடாய். மேற்படி ஆட்டுக்கிடாயின் கலர் எடை விபரம் தெரியுமா என்றால் எடை தெரியாது, 2 கருப்பு, 1 கருப்பும் வெள்ளையும் சேர்ந்தது. டாடா ஏஸ் வாகனத்தின் பதிவு எண் தெரியாது. போலீசார் என்னையும் என் அப்பாவையும் தனித்தனியாக விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் என்னுடைய கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் அ.சா.1 என் பக்கத்து ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் போலீசார் கேட்டுக்கொண்டற்கு இணங்க கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.